**படல்கும்புர பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான படல்கும்புர பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் போதும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்த மீளாய்வாண்டின் போது சபைக்குச் கையளிக்கப்பட்ட இலக்கமில்லாத தண்ணீர் பவுசரின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான இரண்டு நூலகங்களின் பயன்பாட்டுப் பதிவேட்டின் படி விலை குறிப்பிடப்படாத 61 புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 83,719 தொகையான சபையின் முற்கொடுப்பனவு மீதியை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

08 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 42,610,791 ஆக இருந்ததுடன் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 38,579,684 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,360,472 கூட்டுத்தொகையான 02 சொத்து விடயங்களையும், ரூபா 1,777,799 தொகையான பொறுப்பு விடயமொன்றையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) | 19(1)(i) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் ஏப்ரல் மற்றும் யூலை மாதங்களில் அமைய நீர்குழாய் தொழிலாளர் மற்றும் நூலக பொறுப்பாளர் சேர்க்கப்பட்டு ரூபா 142,938 தொகை சம்பளம் மற்றும் படிகளாக சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும், உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 43,282,312 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1987 இன் 44 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | |
| | 23(அ) பிரிவு | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டில் 12 கைத்தொழில்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |

### 1.3.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சபையின் அமைய சுகாதாரத் தொழிலாளர் படல்கும்புர பிரதேச சுகாதார சேவைகள் அலுவலகத்தில் சேவையாற்றியதற்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர், ஒக்தோபர், நவம்பர் மாதங்களுக்காக அங்கீகாரமின்றி சபை நிதியத்திலிருந்து ரூபா 32,236 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 சனவரி 25 ஆந் திகதிய 12/ஆ/06 மேலதிக எரிபொருள் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் தலைவரின் மாதாந்த எரிபொருள் எல்லை 300 லீற்றராக இருந்ததுடன், அந்த அளவினை விஞ்சி பயன்படுத்தப்பட்ட 200

லீற்றர் எரிபொருளுக்காக மொனராகலை உதவி ஆணையாளரின் அங்கீகாரமும், அதனைவிட மேற்பட்ட லீற்றர் அளவுகளுக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமும் பெறவேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி ரூபா 18,331 பெறுமதியான 151 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 154,709 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 719,031 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் அதிகரிப்பு ரூபா 564,322 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 ஆதனவரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 140(1) இன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டின் பின்னர் 2013 திசெம்பர் 12 ஆந் திகதி வரை ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 வாடகை

(அ) பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2008 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பல்கும்புற சந்தைத் தொகுதியில் 16 கடைகள் 2013 திசெம்பர் 12 ஆந் திகதி வரை வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கும்புற பிரதேச சபை வாராந்த சந்தையின் 03 கடைகளை மீளாய்வாண்டின் போதும் வாடகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 06 கடைகளிலிருந்து ரூபா 56,728 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) படல்கும்புற நகரத்தில் மீன் விற்பனைக் கடைகளை மீளாய்வாண்டிற்காக வாடகைக்கு வழங்குவதற்கு 2012 நவம்பர் 15 ஆந் திகதி நடைபெற்ற கொள்வனவுக் குழுவின் போது தீர்மானிக்கப்பட்டு 2013 சனவரி 28 ஆந் திகதி ரூபா 138,889 தொகையான பாதுகாப்பு பிணைவைப்பு பெறப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் யூன் 07 ஆந் திகதி வரையிலும் சபை உடன்படிக்கை கைச்சாத்திடாது வாடகையாளருக்கு மீள கடையை நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டு உரிய வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) படல்கும்புற நகரத்தில் அமைந்துள்ள 04 ஆம் இலக்க பசுமாட்டிறைச்சிக் கடை 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 1,360,500 தொகையில் வாடகைக்கு எடுத்த வாடகையாளருக்கு 2012 ஆம் ஆண்டிற்காக குளிரூட்டப்பட்ட பசுமாட்டிறைச்சி வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்காக ரூபா 3,300 தொகையான வியாபார அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

2012 ஆம் ஆண்டில் வாடகைக்கு வழங்கும் போது முறையான கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 1,496,500 தொகையான வருமானத்தை சபை இழந்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது இந்த பசுமாட்டிறைச்சிக் கடை ரூபா 1,646,205 தொகையான ஆகக் குறைந்த கேள்விக்கு வாடகைப் பணம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் முறையான பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு அறவிடவேண்டியிருந்த வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 156,849 |
| முத்திரைக் கட்டணம் | 807,593 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) சபையின் 04 நூலகங்களுக்குரிய 2012 ஆம் ஆண்டின் போது மெய்மையாய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 28,622 பெறுமதியான 272 நூலகப் புத்தகங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது கிடைத்த ரூபா 152,440 தொகையான நிர்மாண வைப்பு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்